டிரினிடி மகளிர் கல்லூரி, நாமக்கல் - 637002.

தமிழாய்வுத்துறை

நாட்டார் வழக்காற்றியல்

தாள் குறியீடு : (23PTAE01)

# தலைப்பு : வரலாறும் நாட்டார் வழக்காறும்


தயாரிப்பு:

முனைவர் பா விஷ்ணுபிரியா,

உதவிப்பேராசிரியர்.

http://www.trinitycollegenkl.edu.in/

## நாட்டார் வழக்காறு

ஜான் தாம்ஸ் என்ற ஆங்கிலேயர் நாட்டார் வழக்காற்றைக் குறிக்கும் ‘FOLKLORE’ என்ற ஆங்கிலச் சொல்லை 1846ஆம் ஆண்டில் உருவாக்கினார். கடந்த காலத்தின் பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், கதைப் பாடல்கள், பழமொழிகள், பாடல்கள், கதைகள் ஆகியன வற்றைக் குறிப்பதாக இச்சொல்லுக்கு அவர் விளக்க மளித்தார். அவரது விளக்கத்தின் அடிப்படையில் பார்த்தால் நாட்டார் வழக்காறென்பது கடந்த காலத்தின் பதிவாகும். எனவே கடந்தகாலம் தொடர்பான பதிவுகள் விரைவாக அழிந்து வரும் சூழலில் இவற்றைச் சேகரித்துப் பாதுகாப்பது நாட்டார் வழக்காறுகளில் ஆர்வம் கொண்டோரின் கடமையாயிற்று. மேலும் இவ்வழக்காறு களைக் கிராமப்புறக் குடியானவர்களைச் சார்ந்ததாகவே கருதினார்.

ஜேம்ஸ் ஃபிரேசர் என்ற மானுடவியலாளர் நாட்டார் வழக்காறு தொடர்பாக 1908ஆம் ஆண்டில் பின்வருமாறு குறிப்பிட்டார்:

“பண்பாட்டு நிலையில் உயர்ந்து விளங்கும் மக்களிடையே புராதனச் சிந்தனைகள் நடை முறைகள் ஆகியன எஞ்சி நிற்கும்போது அது நாட்டார் வழக்காறாகும்.”

## வரலாறும் நாட்டார் வழக்காறும்

வரலாற்றியலாளர்கள் பலர் நாட்டார் வழக்காறு என்றாலே அதை ஒதுக்கிப் புறந்தள்ளுகின்றனர். ஆனால் வரலாற்றின் தந்தையெனப்படும் ஹெரொடாட்டஸ் என்பவரைக் குறித்து பெர்ட்ராண்ட் ரஸ்ஸல் பின் வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

“வரலாற்றின் தந்தையென்றழைக்கப்படும் ஹெரொடாட்டஸின் படைப்பைப் பல காரணங் களுக்காகப் படிக்க வேண்டும். முதலில் அவரிடம் பல சுவையான கதைகள் உண்டு. இக்கதைகளை வரலாற்றுக் கண்கொண்டு அவர் பார்க்கவில்லை. அதேபோல் வரலாற்றியலாளர் என்பதால் அவற்றைத் தவிர்க்கவுமில்லை அவருடைய காலத்தில் நிலவிய பல காட்டுமிராண்டிப் பழக்கங்களை அவர் வருணிப்பதை மானுட வியலை ரசிக்கும் அனைவரும் விரும்புவர். பயணிகளின் கதைகளைத் தான் அவர் மீண்டும் மீண்டும் சொல்கிறார். ஆனால் இவற்றை நவீன ஆய்வுக்குட்படுத்துகிறார். இவர் அறிந்த நாடுகள் மற்றும் இனங்கள் பற்றிய இவரது ஆய்வுகள் நிதானமானவை, ஆழமானவை. இவற்றைப் பற்றி அதிக மறியாதவர்களுக்கு இவை நல்ல அறிமுகமாகும்”.

கடந்த காலம் தொடர்பானதாக வரலாற்றையும், கடந்த கால மிச்சங்களின் பதிவாக நாட்டார் வழக் காறையும் நோக்கியதன் விளைவாக இவ்விரண்டு அறிவுத் துறைகளுக்கும் இடையே ஒற்றுமை இருப்பதாகக் கருதும் நிலை உருவானது. இதன் தொடர்ச்சியாக வரலாற்றுப் பண்பு ((Historical sense) ) கொண்டதாக நாட்டார் வழக்காற்றைக் கருதும் போக்கு உருவானது. ஜியார்ஜ் லாரன்ஸ்கோம் என்பவர் 1908இல் ‘ஒரு வரலாற்று அறிவியலாக நாட்டார் வழக்காறு’ ((FOLKLORE as an Historical Science) ) என்ற நூலை எழுதினார்.

# மரபு

மரபுடன் தொடர்புடையதாக நாட்டார் வழக்காற்றியலாளர்கள் இன்றும் நாட்டார் வழக்காறு களைக் கருதுகின்றனர். வரலாறு குறித்தும் இதே கருத்துண்டு. மரபுக்கும் வரலாற்றுப் பழமைக்கும் இடையிலான இணைப்புக் குறித்து டி.எஸ்.எலியட் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

“பாரம்பரியம் என்பது ஒரு சில இறுக்கமான நம்பிக்கைகளைக் கட்டிக்காப்பதல்ல. பழைய பாரம்பரியத்தை இறுக்கமாகப் பற்றிக் கொள்ளும் அல்லது பழைய பாரம்பரியத்துக்குப் புத்துயிர் தரும் முயற்சியில் நாம் இறங்கக்கூடும். அதே போன்று அவசியமானதையும் அவசியமற்ற தையும் பிரித்தறிய முடியாமல் குழப்பி விடக் கூடும்.

மாற்றத்திற்கு அப்பாற்பட்டதாகவும் மாற்றத் திற்கு எதிரானதாகவும் பாரம்பரியத்தைக் கருதி கடந்த கால நிலைக்குத் திரும்ப முயற்சி செய்யலாம். அக்கடந்த காலச் சூழலில் இருந்த வாழ்வுக்கு உயிர் கொடுக்காமல் அந்தச் சூழலுக்கு மட்டும் உயிர்கொடுக்க நினைக்கும் தவறைச் செய்துவிடலாம்”.

வரலாற்றுப் பழமை குறித்துப் பேசும் போது ரஸ்ஸலின் இக்கூற்றை நினைவில் கொள்வதவசியம். மேலும் ‘வரலாற்றுணர்வில் மரபு இடம் பெறுகிறது. அதேநேரத்தில் வரலாற்றுணர்வில் பழங்காலம் மட்டுமின்றி நிகழ்காலமும் இடம்பெறுவதவசியம்’ என்றும் அவர் வலியுறுத்துகிறார்.

## வரலாறும் மக்களும்

நாட்டார் வழக்காறு, வரலாறு, வரலாற்று வரை வியல் தொடர்பாக இதுவரையறிந்துகொண்ட செய்திகளின் பின்புலத்தில் மக்களுக்கும் வரலாற்றுக்கு மான தொடர்பைக் கண்டறிய வேண்டும்.

காலனிய ஆட்சிக்காலத்தில் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் கற்றுத் தரப்பட்ட வரலாற்றுப் பாடம் குறித்து இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தாம் எழுதிய கட்டுரையில் ரவீந்திரநாத் தாகூர் பின்வருமாறு எழுதியுள்ளார்.

“தேர்வுகளுக்காக நாம் படித்து மனப்பாடம் செய்யும் இந்திய வரலாறு நம்மை அச்சுறுத்தும் நடுநிசிக் கதைகளாகவே உள்ளது. மர்ம மனிதர்கள் திடீரெனத் தோன்றுகின்றனர். வன்முறையும், கொலைகளும் தொடர்கின்றன. தந்தைக்கும், மகனுக்கும், அண்ணன், தம்பிகளுக்குமிடையே அரியணைக்காகப் போட்டிகள் நடைபெறு கின்றன. ஒரு கும்பல் வெளியேறினால் மற் றொன்று வருகிறது. ஆப்கானியர், முகலாயர், போர்ச்சுகீசியர், பிரெஞ்சுக்காரரர் மற்றும் ஆங்கிலேயர் என்று பலரும் சேர்ந்து இந்தப் பயங்கரக் கதைகளை மேலும் சிக்கலாக்கு கின்றனர். பளபளக்கும் வண்ணங்களால் தீட்டப் பட்ட காட்சிகளால் மங்கிப் போன இந்தக் கண்ணாடியின் வழியாகப் பார்த்தால் உண்மை யான இந்தியாவைக் காணமுடியாது. உண்மை யான இந்தியர்கள் இந்திய வரலாற்றில் எங்கே இருக்கிறார்கள்? இந்தக் கேள்விக்கு மேற்கூறிய வரலாற்றில் பதிலில்லை. வன்முறைகளிலும் கொலைகளிலும் ஈடுபட்டவர்களைத் தவிர வேறு இந்தியர்கள் இருந்ததில்லையென்ற எண்ணம் தான் இந்த வரலாற்றைப் படிப்பவர்களுக்குத் தோன்றும்”

## அடித்தளத்தில் இருந்து வரலாறு

இவற்றுள் அடித்தளத்தில் இருந்து வரலாறு என்பதை முன்னர்க் குறிப்பிட்ட பெர்னாட் கோன் என்ற மானிடவியலாளர் Protological History என்றழைக்கிறார். இதை அடித்தள வரலாறு அல்லது கீழ்நிலை வரலாறு என்று தமிழில் அழைக்கலாம். இவ்வரலாறு குறித்து அவர் தரும் விளக்கம் வருமாறு:

“சாமானிய மக்களைக் குறித்துப் படிப்பதே அடித்தள வரலாறாகும். குரல் எழுப்ப முடியாதவர், வலுவிழந்தவர், அதிகாரமற்றவர், சுரண்டப்பட்டவர் ஆகியோர் முந்தைய மேல்தட்டு வரலாற்றாய்வாளர்களால், மௌன மானவர்களாக, வரலாற்றின் நாயகர்களாகும் தகுதியற்றவர்களாகக் கருதப்பட்டனர். எனவே வரலாற்றின் பின்னால் இவர்கள் தள்ளப்பட்டனர். நாகரிகமும் முன்னேற்றமும் ஏற்பட்டபோது, இவற்றால் பயன்பெற்றோராக மிதவாத வரலாற்றி யலாளர் இவர்களை நோக்கினர். நாகரிகத்திற்கும், முன்னேற்றத்திற்கும் ஏற்படும் களங்கமாக பழமைவாத வரலாற்றியலாளர் இவர்களைக் கருதினர். இக்குழுக்களை ஆய்வு செய்வது சிரமம். ஏனென்றால் பெண்கள், தொழிலாளர், கறுப்பர், சிறு இனக்குழுக்கள் குறித்த தரவுகள் குறைவு. பெரும்பாலும் வரலாற்றாய்வுகளில் இவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை. இவ்வாறு புறக்கணிக்கப்பட்ட குழுக்கள் குறித்த ஆய்வுகள் கடந்த சில ஆண்டுகளில் அதிகரித்துள்ளன. இம்மக்கள் குறித்து ஆய்வு மேற்கொண்ட வரலாற்றியலாளர்கள் முழுமையான வரலாற்றை உருவாக்கியுள்ளனர்.”

## வரலாற்றுச் சான்றாக நாட்டார் வழக்காறு

இப்புதிய வரலாற்றுப்பள்ளிகளுக்கு நாட்டார் வழக்காறு சான்றாக அமைகிறது. எனவே வரலாற்றியலாளனுக்கும் நாட்டார் வழக்காற்றியலாளனுக்கும் இடையிலான பொதுவெளி குறித்தும், இவ்விரு துறையினருக்கும் இடையிலான ஒத்துழைப்புக் குறித்தும், ஆராய்வது அவசியமாகிறது.

வாய்மொழி அல்லது எழுதப்படாத சான்றுகளை ஏற்றுக்கொள்வதற்கு வரலாற்றியலாளர் தயங்குகின்றனர். இத்தயக்கத்திற்குப் பின்வரும் மூன்று காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன.

i. எழுதப்படாதனவும் வாய்மொழி மரபும் நம்பத் தகாதனவாகும்.
ii. ஆவணங்கள், பிற சான்றுகளின் துணையுடன் எழுதப்படும் உண்மைகளே நல்ல வரலாறாக இருக்க முடியும்.
iii.கல்வியறிவில்லாத மக்கள் காலவரிசை முறையைப் பொருட்படுத்துவதில்லை. இதனால் நாட்டார் வழக்காறுகளில் வரலாற்றுணர்வு இருப்ப தில்லை.

இக்காரணங்களைக் கூறி வரலாற்றுச் சான்று களாகும் தகுதி நாட்டார் வழக்காறுகளுக்குக் கிடையாது என்று வரலாற்றியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். அவர்களைப் பொருத்தஅளவில் எழுத்து மரபு சார்ந்த, மேற்கத்திய வரலாற்று வரைவியல் முறைப்படி எழுதப் பட்ட வரலாறுதான் அறிவியல் பூர்வமான வரலாறாகும். வாய்மொழிச் சான்றுகளுக்கும், எழுத்துவடிவிலான சான்றுகளுக்கும் இடையே ஊடாட்டம் உண்டு என்பதை இவர்கள் மறந்துவிடுகின்றனர்.

# நன்றி

http://www.trinitycollegenkl.edu.in/